# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 14 திங்கட்கிழமை 27.01.2025 கதிர் 109



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# சுதந்திர தினம் அன்று தமிழர் தாயகத்தில் கரி நாள் போராட்டம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அழைப்பு




யாழ்ப்பாணம், ஜன. 27

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாரிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தயாராகியுள்ளது.

சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கறுப்பு நாளாக நினைவுகூர்ந்து போராட்டம் நடத்தவுள்ளதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் சங்க இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

7 ➤

# உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரலில் நடத்தப்படலாம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க எதிர்பார்ப்பு



யாழ்ப்பாணம், ஜன. 27

வரும் ஏப்ரல் மாதத்தின் இரண்டாம் அல்லது நான்காம் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்

7 ➤

# விசேட சோதனை நடவடிக்கை: 4 ஆயிரத்து 269 பேர் சிக்கினர்!



கொழும்பு, ஜன 27

நாட்டில் 13 நாட்களாகச் செயற்படுத்தப்பட்ட விசேட குற்றத் தடுப்புத் திட்டத்தின் மூலம் 4 ஆயிரத்து 269 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனவரி 12 ஆம் திகதி பொலிஸார் விசேட குற்றத் தடுப்புத் திட்டத்தைத் ஆரம்பித்ததாகப் பொலிஸ் செய்தித் தொடர்பாளர்

7 ➤

# 34 இந்திய மீனவர்களுக்கும் பெப். 5 வரை விளக்கமறியல்



கிளிநொச்சி, ஜன 27

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழகம் - இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 34 மீனவர்களை

7 ➤

# யோஷித பிணையில் விடுவிப்பு



கொழும்பு, ஜன 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ஷ இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது 5 கோடி ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முறையற்ற விதத்தில் சொத்துக்களை ஈட்டிய குற்றச்சாட்டில் பெலியத்தையில் வைத்து நேற்றுமுன்தினம் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதுடன் புதுக்கடை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

7 ➤

# மட்டு. காட்டுப் பாதையில் இளைஞரின் சடலம் மீட்பு




மட்டக்களப்பு, ஜன 27

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மியான்குளம் காட்டுப் பாதையில் இன்று ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

7 ➤

# நாயைக் கொலை செய்த பெண்ணொருவர் கைது!



முல்லைத்தீவு, ஜன 27

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் நாய் ஒன்றைக் கழுத்தை நெரித்து கொடூரமாகக் கொன்ற சம்பவம் தொடர்பாக பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

7 ➤

# பாடசாலை மாணவியை வற்புறுத்தி மதுபானம் பருகச் செய்த தனியார் ஆசிரியர் ஒருவர் கைது!



கொழும்பு, ஜன 27

19 வயது மாணவி ஒருவரை வற்புறுத்தி மதுபானம் பருகச் செய்த குற்றச்சாட்டில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பெல்மதுளை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மதுபானத்தை அருந்திய குறித்த

7 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மஹிந்தவின் பிரச்சினைக்கு தீர்வு சொல்கிறார் அநுர





கொழும்பு, ஜன 27


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு குடியிருக்க வீடு இல்லையென்றால் அரசாங்கம் அதற்குப் பொருத்தமான வீட்டை வழங்கும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகமவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, தானும் தனது அமைச்சர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு இதுவரை செல்லவில்லை என்றும், முன்னாள் ஜனாதிபதிகள் அரச இல்லங்களிலிருந்து வெளியேற ஏன் சிரமப்படுகின்றனர் என்றும் கேள்வி எழுப்பினார்.

"வரிசெலுத்துவோரின் பணத்தை செலவழித்து ஒரு மாளிகையில் வாழ்வது நியாயமற்றது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் மாறும் பட்சத்தில் அவர்களால் ஏன் மாற முடியாது? அவர்களுக்கு போக வேறு வசிப்பிடம் இல்லை என்றால், அவர்களுக்கு வாழ பொருத்தமான வீட்டை நாங்கள் வழங்குவோம், அவர்கள் வசிக்கும் மாளிகை மிகப் பெரியது, "என்று ஜனாதிபதி கூறினார்.

"நாங்கள் அவர்களை வெளியேறச் சொன்னால், அவர்கள் அதை அரசியல் துன்புறுத் தல் என்று சொல்கிறார்கள். நாங்கள் யாரையும் துன்புறுத்தவில்லை. நாட்டை புதிய திசையில் கொண்டு செல்கிறோம். அவர்களை வெளியேறச் சொல்வதற்கு முன், அவர்கள் வெளியேற வேண்டும். அவர்களிடம் நாம் கேட்பது மாற்றத்தை தான். வரி செலுத்துவோரின் பணத்தை செலவழிப்பதற்கு முன், நாம் இரண்டு முறை யோசிக்க வேண்டும், "என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

# வாகனங்களின் விலை அதிகரிக்கும் ஜனாதிபதி



கொழும்பு, ஜன 27

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் பெப்ரவரியில் சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஹோமாகமவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நாட்டைப் பாதித்த அந்நியச் செலாவணி நெருக்கடியால், பிப்ரவரி 2022 இல் நாட்டிற்குள் வாகன இறக்குமதி முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து, நாட்டில் வாகன விலைகள் வேகமாக அதிகரித்தன, மேலும் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 15 ஆண்டுகளுக்கு பிறகு இறக்குமதி செய்யப்பட்ட உப்பு



கொழும்பு, ஜன 27

இந்தியாவில் இருந்து 1,485 மெட்ரிக் டொன் அளவிலான உப்பு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று(27.01.2025) உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உப்பு உற்பத்தி கடுமை யாக பாதிக்கப்பட்டிருந்ததால் உப்பினை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

இதற்கமைய, 30,000 மெட்ரிக் டொன் உப்பு நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து பெப்ரவரி 28ஆம் திகதி வரை உப்பு இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம்



கொழும்பு, ஜன 27

இந்த ஆண்டில் இது வரையான காலப்பகுதி யில் 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 614 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 3 வாரங்களில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய, 19 சுகாதார அதிகாரி பிரிவுகள் அதிகளவில் டெங்கு பரவல் அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (ஐ)

# பொறுத்திருந்து பார்ப்போம்



கொழும்பு, ஜன 27

சிவப்பு அரிசி தட்டுப்பாடு மற்றும் தேங்காய்களின் விலை உயர்வு குறித்து காலியில் நேற்று மக்கள் வினவிய போது பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் எனக் கூறினார்.

காலி, கட்டுஹெம்பலாவில் உள்ள மறைந்த மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவனின் வீட்டிற்கு நேற்று காலை சென்றிருந்த விக்கிரமசிங்க, மறைந்த ஊடகவியலாளர்களின் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

விக்டர் ஐவனின் மறைவு பாரிய இழப்பாகும் எனவும், அவர் நாட்டுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளார் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

மறைந்த ஊடகவியலாளரின் வீட்டில், குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் கூடிய போது, சிவப்பு அரிசி தட்டுப்பாடு மற்றும் தேங்காய் விலை குறித்து கேள்விகளை எழுப்பினர், சிலர் ஒரு தேங்காய் ரூ. 200க்கு விற்கப்படுவதாகவும் கடந்த முறை 10 கிலோ சிவப்பு அரிசியை வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்க என்றும் கூறினர்.

"சேர், நீங்கள் தான் எங்கள் நம்பிக்கை, எங்களுக்கு நீங்கள் தேவை" என்று அம்மக்கள் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

# பாடசாலை தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பு



கொழும்பு, ஜன 27

இந்த வருடத்திற்கான புதிய பாடசாலை தவணை இன்று ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. முதல் பாடசாலை தவணை மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டு, முதல் கட்டம் மார்ச் 14ஆம் திகதி முடிவடைகிறது.

முதல் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையிலும் மூன்றாம் கட்டம் ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரையிலும் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐந்தாம் தர புலமைப்பரிசில் மதிப்பெண்கள் தொடர்பான மீள் திருத்தங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒன்லைன் முறையின் மூலம் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை வெளியாகியிருந்த நிலையில், பெறுபேறுகளின் மீள் திருதத்திற்கு பெப்ரவரி 06ஆம் திகதி வரை விண்ணப்பிக்க அவகாசம் உள்ளது. (ஐ)

# பென்சில்கள் தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஜன 27

பாடசாலை மாணவர்களுக்காக பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைக் கொள்வனவு செய்யும் போது அவற்றின் தரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைத் தயாரிப்பதற்காக வெவ்வேறு இரசாயனங்களும் உலோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன என கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்தியர் மஹிந்த விக்ரமாராச்சி தெரிவித்துள்ளார்.

அவற்றைக் கொள்வனவு செய்யும் போது இந்த விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பிரியந்த பெர்னாண்டோ, தரமற்ற வர்ண பூச்சுகள் தொடர்பில் பெற்றோர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினார். (ஐ)

# அரசியல் கைதுகளுக்கு தலைமை தாங்கும் விஜேபால

கொழும்பு, ஜன 27

கைதுகள் அல்லது பொய்யான தடுப்புக்காவல்கள் செய்யப்பட்டால், குற்றவாளிகள் மீது வழக்குத் தாக்கல் செய்வோம் என்பதை அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அரசாங்கத்தில் உள்ள மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதுகளுக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் தலைமை தாங்கும் நிலையில், தற்போதைய சட்டத்தின் பிரகாரம் கைதுகள் இடம்பெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கம்யூனிசக் கட்சி காரியாலயத்தில் பங்காளிக் கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2015 நல்லாட்சி அரசாங்கமும் அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி செயற்பட்டது. அக்காலகட்டத்தில் மகிந்த ராஜபக்சவின் இளைய புதல்வர் யோஷித ராஜபக்ச இரண்டாவதாக கைது செய்யப்பட்டு, 40 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

அதேபோல் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டு, 92 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக இன்று வரை வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் எதிர்ப்பு குழுவின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜேபால இந்த அரசாங்கத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கிறார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் தான் தற்போது இடம்பெறுகின்றன. கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டதன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. நாங்கள் இம்முறை இதற்கு இடமளிக்கப் போவதில்லை.

போலியாக கைது செய்து, விளக்கமறியலில் வைத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம்" என்றார். (ஜ)

# தூணுடன் வான் மோதி விபத்து: சாரதி கைது



மட்டக்களப்பு, ஜன 27

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிள்ளையாரடி சர்வோதய வீதியில் வீதியைவிட்டு விலகிய வான் மின்சாரத் தூணுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து நேற்றையதினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மின்சார தூண் உடைந்து வீழ்ந்ததுடன் வான் பலத்த சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## விசப்பாசியின் தாக்கத்தால் ஆறுபேர் வைத்தியசாலையில் அனுமதி

காரைநகர, ஜன 27

யாழ். காரைநகர் - காசூரினா கடலில் நீராடிய அறுவர் விசப்பாசி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கசூரினா சுற்றுலா மையமானது காரைநகர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படுவதால் இது குறித்து காரைநகர் பிரதேச சபையின் செயலாளரை தொடர்புகொண்டு வினவியவேளை, “நேற்று (26) விசப்பாசி தாக்கிய ஆறுபேர் காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக எனக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், நான் காரைநகர் பொதுசுகாதார வைத்திய அதிகாரிக்கு இது குறித்து தெரியப்படுத்தினேன். அந்தவகையில் விசப்பாசியினை ஒழிப்பதற்கு வினாகிரி வாங்கி தருமாறு கோரிய நிலையில் நான் அதனை வாங்கி கொடுத்தேன்.

கடந்த நாட்களில் இவ்வாறான தாக்கம் எவையும் இடம்பெறவில்லை. திடீரென இன்றையதினமே இந்த விசப்பாசி தாக்கம் இடம்பெற்றுள்ளது" என்றார்.

இந்நிலையில் இது குறித்து மேலதிக தகவல்களை பெறுவதற்கு காரைநகர் வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு மேற்கொண்ட போதிலும் வைத்தியசாலை தரப்பினரை தொடர்புகொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி விவகாரம் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி ரகுராம் எந்த அடிப்படையில் அந்த பதவியில் இருந்து விலகினாரோ அந்த விடயத்துக்காக உயர்ந்த கௌரவத்தோடு மீளவும் கலைப்பீட பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மனோகரன் சோமபாலன் இதனை தெரிவித்துள்ளார்.




மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பேரவை கூட்டம், கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராமின் பதவி விலகல் என்பதை தொடர்ந்து பல்வேறு தகவல்கள் வெளியாகும் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் இந்த ஊடக சந்திப்பை நடத்துகிறோம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சில மாணவர்கள் போதைப் பொருள் மற்றும் மதுபானங்களை நுகர்ந்து பரமேஸ்வரன் ஆலயம் பொங்குதமிழ் தூபி முன்பாகவும் முச்சக்கர வண்டிகள் சகிதம் நின்று ஏனைய மாணவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட வேளை கலைப்பீட பீடாதிபதி, சட்ட நிறைவேற்று அதிகாரி, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பவர்களால் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி உத்தியோகத்தர்களிடம் குறித்த மாணவர் குழு தகாத வார்த்தைகளில் முரண்பட்டார்கள் என்ற அடிப்படையில், குறித்த மாணவர்கள் மீது முறைப்பாடு முன் வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து பேரவை என்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஒழுக்காற்றுச் சபையானது குறித்த மாணவர்களுக்கு குறித்த காலப்பகுதிகான தண்டனையை வழங்கியிருந்ததாகவும் பேரவை அதனை கேள்விக்குட்படுத்தி பொது மன்னிப்பு வழங்கியதாகவும் அறிவிக்கப்பட்டது.

போதைவஸ்து பாவனை, மதுபான பாவனை என்பன தினமும் இடம்பெற்றுவந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என சொல்லப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலயத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பு காணப்படுகின்ற சில தடயங்கள் இங்கு போதைப்பொருள் பாவனைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்று எண்ணத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது.

மேற்படி விடயம் தொடர்பாக குறித்த மாணவர்கள் கல்லாசனம் அகற்றப்பட்டதையும் அதன் விளைவாக அதனை விமர்சித்ததன் காரணத்தாலே பழிவாங்கப்பட்டோம் என்ற விடயத்தையும் சொல்லி இருந்தனர்.

நான் எட்டு பேருக்கு மட்டும் கலைப்பீட மாணவ பிரதிநிதி அல்ல. 3500 மாணவர்களுக்கான தலைவராகவே நான் உள்ளேன். சகலரின் கருத்தையும் கேட்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும்.

தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு தண்டனை விலக்களிக்க முடியும் என்றால் இதுவரை பல்கலைக்கழகத்தினால் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களுக்கு என்ன பதிலை பேரவையும் பல்கலைக்கழகமும் சொல்லப்போகின்றது.

எந்த தவறிழைத்தாலும் உண்ணாவிரதம் செய்தால் வகுப்பு தடையை விடுத்து உள்ளே வரலாம் என்ற முன்னுதாரணத்தை இந்த பேரவை மேற்கொண்டிருந்தால் என்ன செய்யும் என்ற கேள்வியை நான் எழுப்புகிறேன்.

பண்பாட்டு அடையாளம், தமிழ் தேசியத்தின் இருதயநாதம் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இவ்வாறான போதைப்பொருள் தொடர்பான செயல்களை அனுமதிக்கின்றது என்பதை இந்த நிர்வாகம் சமூகத்திற்கு சொல்ல வருகின்றது.

மேலும், கலைப்பீட மாணவர் ஒன்றியம் மீளவும் பீடாதிபதியாக ரகுராம் நியமிக்கப்படும்வரை சாத்வீக ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கும். போராட்டம் தொடர்பான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

# இந்தியாவில் முதல் மாநிலம் – உத்தரகாண்டில் இன்று அமுலுக்கு வரும் பொது சிவில் சட்டம்!

இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையை உத்தரகாண்ட் பெறு கிறது.

கடந்த 2022-ஆம் ஆண்டு நடந்த உத்தரகாண்ட் சட்டசபை தேர்த லின்போது மாநிலத்தில் பொது சிவில் சட்டம் நிறைவேற்றப்படும் என பா.ஜ.க. அதன் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தது.

சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள நிலையில், இன்று உத்தரகாண்டில் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படுகிறது. பொது சிவில் சட்டத்திற்கான வலைதளத்தை அம்மாநில முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி தொடங்கி வைக்கிறார்.

பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த தேவையான முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் முடிவடைந்த நிலையில் இன்று இச்சட்டம் அமுலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது.






## மத்திய பட்ஜெட் – நாளை மறுநாள் தி.மு.க. எம்.பி.-க்கள் கூட்டம்!

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நாளை மறுதினம் புதன்கிழமை காலை சென்னையில் நடைபெறவிருக்கின்றது.

இது தொடர்பாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 29-1-2025 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

கூட்டத்தில், மத்திய அரசின் 2025-26 ஆண்டிற் கான நிதிநிலை அறிக்கை தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளதால் கழக மக்களவை- மாநிலங்களவை உறுப் பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணா பல்கலை மாணவி வழக்கு: காவல் ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் இடைக்கால தடை!




சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி கடந்த மாதம் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான வழக்கில் காவல் ஆணையர்

மீது நடவடிக்கை எடுக்க உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் ஞானசேகரனை கைது செய்து சிறையில் அடைத்த நிலையில் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், பாலியல் பலாத்கார வழக்கையும், முதல் தகவல் அறிக்கை வெளியானது குறித்த வழக்கையும் விசாரிக்க 3 பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நியமித்து உத்தரவிட்டனர்.

மேலும் விசாரணை ஆரம்பகட்ட நிலையில் உள்ளபோது, அரசு அனுமதி இன்றி செய்தியாளர் சந்திப்பை நடத்தி, வழக்கு குறித்த முக்கிய தகவல்களை பகிர்ந்த சென்னை பொலிஸ் ஆணையாளர் அருணுக்கு எதிராக சட்டப்படி நட வடிக்கை எடுக்கலாம் எனவும் அரசுக்கு உத்தரவிட்டது..

உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீடு மனு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அண்ணா பல்கலை. மாணவி வன்கொடுமை குற்றபத்திரிக்கை ஆவணம் எவ்வளவு நேரம் பதிவிறக்கம் செய்யும் வகையில் இருந்தது? மாணவி தொடர்பான விவரங்களை வெளியிட்டது யார் என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், சென்னை காவல் ஆணையர் மீதான உயர் நீதிமன்றத்தின் கருத்துகளுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மேலும், காவல் ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கும் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

## மகாராஷ்டிராவில் 'ஜிபிஎஸ்' நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் மரணம்– புனேயில் பாதிப்பு 101 ஆக உயர்வு!

மகாராஷ்டிராவில் 'ஜிபிஎஸ்' நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் மர ணித்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரில் கடந்த சில நாட்களாக 'கில்லியன் பேர் சிண்ட்ரோம்' (ஜிபிஎஸ்) என்ற ஆட்டோ இம்யூன் நோய் பாதிப்பு திடீரென அதிகரித்து வருகிறது.

மனித உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம் தவறுதலாக உடலின் ஆரோக்கியமான செல்களை தாக்குவது 'ஆட்டோ இம்யூன்' நோய் என்று அழைக்கப்படுகிறது.

இத்ததகைய நோய்களில் கில்லியன் பேர் சிணட்ரோம் ஒன்றாகும். இந்த நோய் தசைகளை இயக்கும் நரம்புகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் கை, கால் தசைகள் வலுவிழக்கும். முதலில் மதமதப்பு போல் தொடங்கி பின்னர் தசை செயல் இழப்பு வரை செல்லக்கூடும். மேலும் உணவு, தண்ணீரை உட்கொள்வதில் சிக் கல் ஏற்படும். பேசுவதிலும் சிரமம் உருவாகும். உயர் இரத்த அழுத்தம் போன்றவை ஏற்பட்டு மோசமான பாதிப்பாக பக்கவாதம் கூட ஏற்படும்.

புனேவில் கடந்த சில நாட்களில் மட்டும் 70-க்கும் மேற்பட்டோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டனர். இதில் 14 பேர் வெண்டிலேட்டர் உதவியுடன் செயற்கை சுவாசம் மூலம் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இந்நிலையில் புனேவில் மேலும் சிலருக்கு ஜிபிஎஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் ஜிபிஎஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 101 ஆக உயர்ந்துள்ளது.

அதில் 14 பேர் செயற்கை சுவாசம் மூலம் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதிக்கப்பட்டவர்க ளின் 19 பேர் 50 முதல் 80 வய துக்குட்பட்டவர்கள்.

இந்நிலையில் சோளாப்பூரில் ஜிபிஎஸ் நோய் அறிகுறியுடன் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் இறந்துள்ளார். இந்நிலையில் புனேயில் ஜிபிஎஸ் நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படும் என துணை முதல்-மந்திரி அஜித்பவார் தெரிவித்துள்ளார்.







நீங்கள் உண்ணும் உணவில் பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள், குறைவான கொழுப்பு உள்ள புரதங்கள் இருக்க வேண்டும். துரித உணவுகள், அளவுக்கு அதிகமான உப்பு போன்றவைகளை தவிர்க்க வேண்டும். தினமும் 30 நிமிடங்கள் நன்றாக உடற்பயிற்சி செய்ய வேண்டும். சுலபமான நடைபயிற்சி, மிதமான சைக்கிள் ஓட்டுதல் போன்றவை இதயத்துக்கு நன்மையைத் தரும். நீண்டகாலமான மன அழுத்தம் இதயத்துக்கு தீங்கு விளைவிக்கும்.

# இதயம் காப்போம்!

இதய ஆரோக்கியம் என்பது மருத்துவ ரீதியிலான பொறுப்பு மட்டுமல்ல. நீங்கள் உங்கள் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தினால், இதய நோய்களைத் தவிர்க்க முடியும். 'இதயம் சார்ந்து செயற்படுங்கள்' என்பதற்கான முக்கியமான ஒரு வழி என்னவென்றால், உங்கள் வாழ்க்கை முறையை நீங்கள்தான் கவனிக்க வேண்டும் என்பதாகும்.

உங்கள் இதயம் நீரழிவு நோய்கள், முறையற்ற உணவு, உடற்பயிற்சி இன்மை, மன அழுத்தம் மற்றும் புகைபிடித்தல் போன்ற காரணங்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும், இதய நோய் ஏற்படுவதற்கான ஆபத்தை குறைக்கலாம் அல்லது அதிகரிக்கலாம். எனவே, ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்காக செயலில் இறங்குங்கள்.

நீங்கள் உண்ணும் உணவில் பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள், குறைவான கொழுப்பு உள்ள புரதங்கள் இருக்க வேண்டும். துரித உணவுகள், அளவுக்கு அதிகமான உப்பு போன்றவைகளை தவிர்க்க வேண்டும். தினமும் 30 நிமிடங்கள் நன்றாக உடற்பயிற்சி செய்ய வேண்டும். சுலபமான நடைபயிற்சி, மிதமான சைக்கிள் ஓட்டுதல் போன்றவை இதயத்துக்கு நன்மையைத் தரும். நீண்டகாலமான மன அழுத்தம் இதயத்துக்கு தீங்கு விளைவிக்கும்.

தியானம், யோகா மற்றும் ஆழமான சுவாச பயிற்சிகளைச் செய்து மனதை அமைதியாக்கலாம். புகைபிடித்தல் இதய நோய்க்கு முதன்மையான காரணமாக அமைகிறது. இதய நோய்களுக்கான ஒரு நபருக்கு பொருந்தும் மருந்து, மற்றவருக்குப் பொருந்தாது. சில சமயங்களில் அது ஆபத்தானதாகவே முடியும். மற்றவர்களுடன் மருந்துகளைப் பகிர்வது தீவிர சிக்கல்களை ஏற்படுத்தலாம். எனவே, மருந்துகளை மாற்றுவதற்கு முன்பு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

முன்னெச்சரிக்கையான பரிசோதனை எப்போதும், சிகிச்சை பெறுவதைவிட சிறந்தது. இதயநோய்களை தடுப்பதற்கான முக்கியமான வழி, தொடக்க கட்டத்திலேயே அதை கண்டறிதலாகும். உயர்ந்த இரத்த அழுத்தம், அதிக கொழுப்பு போன்றவை இதய நோய்களின் ஆரம்ப கட்ட அறிகுறிகளைக் காட்டாமல் இருக்கும். அதிகமான இரத்த அழுத்தம் குணமற்ற நோயாகும். அதை தொடர்ந்து கண்காணிப்பது அவசியம்.

அதிகமான கொழுப்பு, இதய நோய்க்கு முக்கிய காரணமாக இருக்கிறது. ஓர் எளிய இரத்த பரிசோதனை இதய ஆரோக்கியத்துக்கான தகவல்களை வழங்கும். நீரிழிவு நோய் மற்றும் இதய நோய் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. எனவே, இரத்த சர்க்கரையை கண்காணிக்க வேண்டும்.


உங்களுக்கான ஆரோக்கியத்தை மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் இதய ஆரோக்கியத்தைப் பற்றி சமூக அக்கறையுடன் அறிவுறுத்த வேண்டியது அவசிய மாகும். ஒருவரது வாழ்க்கைமுறை எவ்வாறு இதயத்தைப் பாதிக்கிறது என்பதை சிலர் அறிந்திருக்காமல் இருப்பார்கள். இதய ஆரோக்கியத்தைப் பற்றிய தகவல்களை உங்கள் குடும்பத்தினருக்கும், சமூகத்துக்கும் பகிர்ந்து, நல்ல பழக்கங்களை ஊக்குவியுங்கள்.

**இதய நோய் அறிகுறிகள்:**

நெஞ்சு வலி அல்லது சிரமம், சுவாசமின்மை, கழுத்து, தாடை, முதுகு அல்லது கைகளைச் சுற்றிய வலி, மயக்கம் அல்லது சத்தி வருதல், அசாதாரணமாக வியர்வை போன்றவை இதய நோய்க்கான அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவரை சந்திக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் ஒரே மாதிரி அல்ல. அதுபோல் இதய ஆரோக்கியமும் ஒரே மாதிரி இருக்காது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

இதய ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வது தனிப்பட்ட பயணமாகும். அதற்கேற்ப உங்கள் மருத்துவரிடம் இருந்து தனிப்பட்ட சிகிச்சைகளையும், ஆலோசனைகளையும் பெற வேண்டும். ஆரோக்கியமான இதயத்துக்காக, இதயம் சார்ந்து செயற்பட்டு, இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துங்கள்.





# பிரேசில் மக்களை கைவிலங்குடன் நாடு கடத்திய அமெரிக்கா!



விமானத்தில் தண்ணீர், ஏ.சி. கூட இல்லாமல் பிரேசில் மக்களை கைவிலங்குடன் அமெரிக்கா நாடு கடத்திய சம்பவம் சர்வதேச வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்று ஒரு வாரம் காலம் முழுமை பெறும் முன் ஏராளமான அதிரடி நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளார். இதில் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை நாடு கடத்தும் அதிபர் டிரம்ப்-இன் நடவடிக்கை உலக அரசியலில் பேசுபொருளாகி இருக்கிறது.

இந்த நிலையில், அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிரேசில் நாட்டவர்கள் அவமதிக்கப்பட்டதாக பிரேசில் குற்றம்சாட்டியுள்ளது. நாடு கடத்தப்பட்ட பிரேசில் நாட்டவர்கள் கைவிலங்கிடப்பட்டு இருந்தனர் என்று பிரேசில் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. இது அவமதிப்பையும் கடந்து, மனித உரிமைகளை மீறும் செயல் என்று பிரேசில் தெரிவித்து இருக்கிறது. அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறி தங்கி வந்த பிரேசில் நாட்டை சேர்ந்த 88 பேர் விமானத்தில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் அழைத்து வரப்பட்டனர். மேலும், விமானத்தில் குளிரூட்டி இயக்கப்படவில்லை என்றும், குடிப்பதற்கு தண்ணீர் கூட வழங்கப்படவில்லை என்று நாடு கடத்தப்பட்டவர்களில் சிலர் குற்றம்சாட்டினர்.

மேலும், சிலர் விமானத்தினுள் அதிக வெப்பம் காரணமாக சிலருக்கு மயங்கினர் என்றும், பயணிகள் கழிவறையை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படவில்லை என்று நாடு கடத்தப்பட்ட பயணிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

பயணிகளை மிக மோசமாக நடத்தியது தொடர்பாக அமெரிக்காவிடம் விளக்கம் கேட்கப்படும் என்று பிரேசில் வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## குடியரசு தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்த புதின்!



இந்தியாவின் 76-வது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அதிபர் புதின் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளதாவது:

75 ஆண்டுக்கு முன் நடைமுறைக்கு வந்த அரசமைப்பு சட்டம், திறன்வாய்ந்த அரசு அமைப்புகளை கட்டமைக்கவும், இந்தியாவின் சுதந்திர, ஜனநாயக வளர்ச்சிக்கும் அடித்தளமிட்டது.

அப்போது முதல் பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில் சர்வதேச அளவில் இந்தியா வெற்றிகளைக் குவித்துள்ளது. சர்வதேச ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் முக்கிய பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் இந்தியா கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

இந்தியா உடனான எங்கள் உறவுகளை மிகவும் மதிக்கிறோம். அனைத்துத் துறைகளிலும் ஆக்கப்பூர்வமான இருதரப்பு ஒத்துழைப்பை தொடர்ந்து கட்டமைக்கவும், சர்வதேச விவகாரங்களில் இந்தியா-ரஷ்யா இடையே ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலை தொடரவும் இருநாடுகளின் கூட்டு நடவடிக்கைகள் நீடிக்கும் என தெரிவித்தார்.



## விமானத்தின் வால் பகுதியை கடுமையாக தாக்கிய மின்னல்!

பிரேசில் நாட்டின் தெற்கே சாவோ பவுலோ நகரில் கடுமையான இடி- மின்னலுடன் மழை பெய்துள்ளது. மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்றும் வீசியது. ஒரு மாதம் பெய்ய வேண்டிய மழை சில மணிநேரங்களிலேயே பெய்தது.

அப்போது அங்குள்ள குவாருலோஸ் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனத்தின் பயணிகள் விமானம் மீது மின்னல் தாக்கி உள்ளது. இதனை விமான பயணியான பெர்ன்ஹார்டு வார் என்பவர் காணொளியாக பதிவு செய்துள்ளார்.

இதுகுறித்து பெர்ன்ஹார்டு வார் கூறுகையில், பெரிய புயல் வீசியது. இதனால் விமானங்கள் தரையில் நிறுத்தி வைகக்கப்பட்டிருந்தன. நாங்களும் பாதுகாப்பான இடத்தில் அமர்ந்திருந்தோம். அப்போது தான் விமானத்தின் வால் பகுதியில் கடுமையாக மின்னல் தாக்கியதை காணொளியாக பதிவு செய்தேன் என்றார்.



## நைஜீரியாவில் பெட்ரோல் டேங்கர் லொறி வெடித்ததில் 18 பேர் பலி!

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள இனுகு மாகாணத்தில் நேற்று மாலை பெட்ரோல் ஏற்றிக்கொண்டு டேங்கர் லொறி சென்றுகொண்டிருந்தது.

இனுகு-ஒனிஸ்டா தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த டேங்கர் லாரி முன்னே சென்ற வாகனங்கள் மோதி விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் டேங்கர் லொறியில் இருந்த பெட்ரோல் தீப்பற்றி வெடித்து சிதறியது. இந்த கோர விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், பலர் படு காயமடைந்தனர். தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் பற்றி எரிந்த தீயை போராடி அணைத்தனர்.

இதில் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நைஜீரியாவின் நிஜர் மாகாணத்தில் இம்மாத தொடக்கத்தில் பெட்ரோல் ஏற்றிச்சென்ற டேங்கர் லொறி வெடித்து சிதறி 98 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவி கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெல்மதுளை நகரில் கார் ஒன்றில் வந்து இறங்கிய 19 வயது மாணவி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதால் அவரைக் குழுவொன்று விசாரித்தது.

இதன்போது அவர் மதுபானம் அருந்தியிருந்ததாகக் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில், காருக்குள் இருந்த மற்றைய நபரும் மதுபோதையில் இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த குழு மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அந்த நபர் மாணவியின் தனியார் வகுப்பு ஆசிரியர் எனவும், அவர் மாணவியை வற்புறுத்தி மதுபானம் பருகச் செய்தார் எனவும் தெரியவந்தது.

இதனையடுத்து, அந்த நபரை அங்கிருந்த குழுவினர் தாக்கியதுடன், அவரைப் பெல்மதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யோஷித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமாக 3 கோடி 40 இலட்சம் ரூபாவைப் பயன்படுத்தி இரத்மலானை பகுதியில் காணியொன்றைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க குறிப்பிட்டிருந்தார்.

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடக்கூடிய குற்றங்களை அவர் இழைத்துள்ளமைக்கான சாட்சியங்கள் காணப்படுகின்றமையினால் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்திருந்தார்.

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உணர்வுகளையும்,-வலிகளையும் உலகுக்கு மட்டுமல்லாமல் தற்போதைய அரசுக்கு எடுத்துக்கூறுவதற்காக தாம் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இந்தப் போராட்டத்தில் பொதுமக்களும் இணைந்து கொண்டு ஆதரவளிக்குமாறும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் வீதித் தடைகளில் சந்தேகத்துக்கிடமான நபர்கள் மற்றும் வாகனங்கள் சோதனை செய்யப்பட்டதாகவும், இதன் மூலம் சட்டத்தைத் தவிர்க்கும் 249 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர 4 ஆயிரத்து 20 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், வெளிநாட்டிலிருந்து செயல்படும் பல பாதாள உலகக் குற்றவாளிகளை நாடு கடத்துவது குறித்தும் எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க கூறியுள்ளார். இதுபோன்ற 4 குற்றவாளிகள் நாடு கடத்தல் சட்டத்தின் கீழ் திருப்பி அனுப்பப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாயைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்திக மன துங்க தெரிவித்தார்.

கழுத்தில் கயிற்றால் கட்டப்பட்டு நாயின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானதைத் தொடர்ந்து, பலரும் இந்தச் சம்பவத்துக்குக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த மாங்குளம் பொலிஸார், சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்தனர்.

மேற்படி பெண் விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மத்தியஸ்த குழு எடுத்த மனிதாபிமானமற்ற முடிவே இந்த நாய் கொல்லப்படுவதற்கு வழிவகுத்துள்ளது என்று சமூக வலைத்தளங்களில் கண்டனம் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டவான் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 34...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்த நிலையில், அவர்களை எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, 34 மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துஅமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வடக்கு மாகாண விஜயத்தின்போது, இந்த மாகாண மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இதனைக் குறிப்பிட்டார்.

அதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனவும், அன்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் ஜனாதிபதி பங்கேற்பார் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாண மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காகத் தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தமைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் அமைகின்றது.

இதேவேளை, கடந்த கால அரசாங்கங்கள் தேர்தல்களை பிற்போட்டிருந்தன. தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது, நீதிமன்றங்களில் சில மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனினும், அவற்றினால் தேர்தலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என நம்புகின்றோம்.

அதேநேரம், ஏப்ரல் மாதத்தின் இரண்டாம் அல்லது நான்காம் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்துகொண்டு கருத்துரைத்தார்.

# புகைப்பழக்கத்திற்கு அடிமையாகும் இலங்கை பெண்களின் வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன 27

இலங்கையில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் புகைப்பழக்க அதிகரிப்பு விகிதம் உயர்வாக இருப்பதாக வைத்தியர் சமன் இத்தகொட தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த புகைபிடிக்கும் ஆண்களின் எண்ணிக்கை, விகிதாசார அடிப்படையில் தற்போது குறைவடைந்திருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

எனினும், துரதிஷ்டவசமாக புகைப்பழக்கம் கொண்ட பெண்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்திருப்பதாக சமன் இத்தகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், இளம் பெண்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அதிகமாக ஆண்களுக்கு ஏற்படும் இரண்டாவது பெரிய புற்றுநோயாக நுரையீரல் புற்றுநோய் காணப்படுகின்றது.

தற்போது, நுரையீரல் புற்றுநோய் பெண்களிடம் ஐந்தாவது பொதுவான புற்றுநோயாக மாறியிருப்பதாக இத்தகொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1.5 மில்லியன் இலங்கையர்கள் புகைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளதாக கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்தது.

இவ்வாறானதொரு பின்னணி இருந்தும் இலங்கையில் புகைப்பழக்கம் பாரியளவில் குறைந்துள்ளதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அப்போது சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை விற்பனை செய்வது தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம்



கொழும்பு, ஜன 27


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸினை விற்பனை செய்யும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் கனேகொடவின் தலைமையின் பேரில் விமான சேவை தொடர்பில் ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில, தற்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பங்குகளை தனியார் மயமாக்கும் மற்றும் விற்பனை செய்யும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையை அரச நிறுவனமாக தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அதன் விற்பனை அல்லது தனியார் மயமாக்கலை தடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வானில் நிகழவுள்ள அரியவகை மாற்றம்




கொழும்பு, ஜன 27

வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய ஆறு கிரகங்களின் அரிய சீரமைப்பு இந்த நாட்களில் வானில் நடைபெற்று வருகின்றது.

ஜனவரி 29 மற்றும் பெப்ரவரி நடுப்பகுதி வரை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு 90 நிமிடங்களுக்குள் இந்த வான அணிவகுப்பை சிறப்பாகக் காணலாம் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் 6 கிரகங்களின் அரிய சீரமைப்பின் கண்கவர் காட்சியை அவதானிக்க முடியும்.

வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கோள்கள் இவ்வாறு அவதானிக்கப்படுவதாகவும் வெற்றுக் கண்ணால் பார்க்கக்கூடிய அளவுக்கு பிரகாசமாக இருப்பதைக் காண முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2025 இல் வெளியிடப்பெற்றது.